# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

மரம் 7 அக்டோபர் 1998 கனி 3

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B.அர்ஜுனன்

## ஒரே ஞானஸ்நானம் எபேசியர் 4:15

### தகுதியுடையோர்

1. குழந்தைகளா? – இல்லை
2. இரட்சிக்கப்பட்டவர்களா? – இல்லை

மனந்திரும்பியவர்கள் (அப்போஸ்தலர் 2:38).

### எது ஒரே ஞானஸ்நானம்?

1. யோவானுடைய ஞானஸ்நானமா?
   – இல்லை (அப்.19:4)
2. பரிசுத்தாவியின் ஞானஸ்நானமா?
   – இல்லை (அப். 1:1–8)
3. அக்கினி ஞானஸ்நானமா?
   – இல்லை (மத். 3:10–12)

இயேசு கட்டளையிட்ட ஞானஸ்நானம் (மத்தேயு 28:18–20)

### தேவை முழ்குதலா / தெளித்தலா

| | | |
|---|---|---|
| 1. தண்ணீர் | – அப்.8:36 | – ஆம்/இல்லை |
| 2. அதிகத்தண்ணீர் | – யோ.3:23 | – ஆம்/இல்லை |
| 3. அடக்கம் | – ரோ. 6:3–4 | – ஆம்/இல்லை |
| 4. வெளிவருதல் | – அப்.8:38 | – ஆம்/இல்லை |
| 5. புதுசிருஷ்டி | – யோ.3:5 | – ஆம்/இல்லை |
| 6. ஓர் இணைப்பு | – ரோமர் 6:5 | – ஆம்/இல்லை |



விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுகிறான் (அப்.2:47)

ஞானஸ்நானம் — கிறிஸ்து

| | |
|---|---|
| கிறிஸ்துவுக்குள் | – கலா. 3:27 |
| நாமத்திற்குள் | – மத். 28:19,20 |
| சரீரத்திற்குள் | – 1கொரி. 12:13 |
| மரணத்திற்குள் | – ரோமர் 3:4 |

### கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

| | |
|---|---|
| ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம் | – எபேசியர் 1:3 |
| பாவமன்னிப்பு | – அப். 10:43 |
| இரட்சிப்பு | – ரோமர் 5:10 |
| நித்தியஜீவன் | – ரோமர் 6:23 |

இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடுகூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம் - 2 தீமோ. 2:11

### இதழின் உள்ளே பன்னிரெண்டு முத்துக்கள் . . . .

பக்கம்


1. இயேசு கண்ணீர் விட்டார் — 1
2. சிந்தனைக்கு — 2
3. நான் — 3
4. அந்நிய மொழி — 4
5. ஆகஸ்டு மாத இதழின் விடைகள் — 5
6. Who Am I?ன் விடை — 6
7. பிலேயாம் (சிறுவர் பகுதி) — 7
8. வெற்றி பெற்றவர்கள் — 8
9. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் ஊழியம் — 9
10. படைப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும் (பெண்கள் பகுதி) — 10
11. இம்மாத வேத அறிவுப்போட்டி — 11
12. ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் தேவையில்லை — 12



Published by

**WORLD LITERATURE PUBLICATIONS**

*POST BOX NO. 5, BATLAGUNDU - 624 202*

**SOUTH INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்

# WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 7 அக்டோபர் [illegible] இதழ் 3


ஆசிரியருரை

## இயேசு கண்ணீர் விட்டார்

## Jesus Wept

இதை வாசிக்கும் எனதருமை சகோதரனே, சகோதரியே, உன்னை சிருஷ்டித்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அன்று எருசலேம் நகரத்தைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதார். ஏன்? எதற்காக அழுதார் என்று தெரியுமா? லூக்கா 19:41,42ம் வசனங்களை வாசிக்கும்போது "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது" என்றார்.

ஆதிமனிதன் ஆதாம் முதற்கொண்டு எல்லோரையும் இரட்சிக்க வேண்டுமென்பதே தேவனுடைய திட்டமாயிருக்கிறது. ஆகையால் ஆதி முதல் கொண்டு தன்னுடைய ஜனங்களை தீமைக்கு விலகும்படி எச்சரித்து புத்தி சொல்லிக்கொண்டே வருகிறார். இதை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஏற்றுக்கொள்ளா தவர்கள் சாபத்தை அனுபவித்து நிலையான ஆக்கினைக்குத் தள்ளப்படுகிறார்கள். "உனக்குக் கிடைத்த இந்தநாளிலாகிலும்" என்று சொல்லுவதைப் பார்க்கின்றோம். எத்தனையோ நாட்களை நாம் வீணடித்துவிட்டோம். நம் கண்களுக்கு சத்தியம் மறைக்கப் பட்டிருந்தது. இப்பொழுதோ நமக்கு வெளியரங்கமாக தோற்ற மளிக்கிறது. ஆகையால் எனதருமை நண்பரே, காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ள இதுவே சந்தர்ப்பம். உனக்காக கண்ணீர் விட்டமுத இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள். அவரை புறம்பே தள்ளாதே. அவரில்லாமல் நீ இந்த உலகத்திற்கு வந்திருக்க முடியாது. நீ யாருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? உன்னை சிருஷ்டித்த கர்த்தர் 'இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்' (வெளி. 3:20) என்கிறார்.

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்கிறீர்கள். ஒருவேளை இதுவரை நீங்கள் அவருடைய சத்தத்தைக் கேட்காமல் இருந்திருக்கலாம் அல்லது அவரை நீங்கள் அறிந்தும் அவர்

உங்களிடத்தில் பிரவேசிக்க இடங்கொடாமல் இருந்திருக்கலாம். இதுவே சந்தர்ப்பம். 'இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்.' இந்த உலகத்தில் சமாதானத்தைத் தேடி மனிதன் அங்குமிங்கும் அலைந்தோடுகிறதை நம்முடைய அனுதின ஜீவியத்தில் பார்க்கின்றோம். மெய் சமாதானம் ஆண்டவர் இயேசுவிடமே உண்டு. அவர் சொல்கிறார், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27) என்றார்.

எத்தனையோ அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்ணாரக் கண்டவர்கள் இஸ்ரவேல் மக்கள். அதைப்போலவே முதல் நூற்றாண்டிலும் இயேசுவின் பின்னே சென்று, அவர் சகல பிணியாளிகளை சுகமாக்குகிறதையும், மரித்தோரை எழுப்புகிறதையும் கண்ணாரக் கண்டு விசுவாசித்தவர்கள் அநேகர். இப்படிப்பட்ட அற்புதங்களைப் பார்த்தும் தேவனை ருசிபார்க்கவில்லை. பாருங்கள், எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலரிலே 6 இலட்சம் பேரில் 2பேர் மட்டுமே கானானை ருசிபார்த்தார்கள். அதைப்போலவே இயேசுவின் அற்புதங்களைப் பார்த்தவர்கள் அவரை சிலுவையில் ஒப்புக்கொடுத்த வுடன் அந்தரங்கசீஷன் யோசேப்பைத்தவிர அனைவரும் ஓடிவிட்டனர். ஒரு மனிதன் அற்புதங்களைப் பெற்றுக்கொள்வதாலும், அல்லது பார்ப்பதாலும் ஒன்றுமில்லை. அவன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்திருக்கவேண்டும். அப்படி அறியாதிருக்கிற மக்களைப் பார்த்து இயேசு கண்ணீர்விட்டார். உன்னுடைய குடும்பத்தில் ஒருவர் இந்த சமாதான வழியை அறியாவிட்டால் அவர் அறிந்துகொள்ள, சுவி சேஷத்தை எடுத்துச்சொல். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் உடனே சொல். காலம் தாழ்த்தாதே. இயேசுவின் கண்ணீர் இன்றும் வீண்போகவில்லை.

சத்தியபரராகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்பட்டிருந்தும், இன்னும் அநேகர் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், மேற்சொல்லிய வசனத்தின் பின்பகுதியில் 'இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.' ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே, இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்டவன் 2 கொரி. 4:4ன்படி "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாச மாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" என்று வாசிக்கின்றோம். நீங்கள் மனந்திரும்பாமல் பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருப்பதால் என்ன பலன்? ஒன்றுமில்லையே! பாவத்தின் சம்பளம் மரணம் என வேதம்

எச்சரிக்கிறது. இப்பாவத்தைத் தள்ளி உன்னை அன்போடு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிற இயேசுவிடம் உன்னை ஒப்படை. அப்பொழுது நிறைவான சமாதானத்தைப் பெற்றுக்கொள்வாய்.

நம்முடைய குடும்பத்தில் ஒருவர் பிரிந்துபோய்விட்டால், நாம் எவ்வளவு தூரம் கஷ்டப்படுவோம் அல்லது வேதனைப்படுவோம் என்பதை யோசித்துப் பாருங்கள். ஒருமுறை மரியாளுடைய சகோதரன் லாசரு என்னும் பேர்கொண்ட ஒருவன் மரித்துப்போய்விட்டான். அப்பொழுது மரியாள், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும், அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கி துயரமடைந்து: அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்துபாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார். . . லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான்" (யோவான் 11:32-44). அழுகிறவர்களுடனே அழுங்கள் என்ற வேதவாக்கியத்தின்படி இயேசு கண்ணீர் விட்டார். ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்ற வார்த்தை நிறைவேறத்தக்கதாக எல்லாருக்கும் முன்பாக லாசருவை உயிருள்ளவனாக நிறுத்தினார். பிரிய நண்பரே, ஒருவரும் கெட்டுப்போவது தேவனுக்குச் சித்தமில்லை. எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

தன் குடும்பத்துக்கோ, அல்லது உறவினர்களுக்கோ ஒரு இன்னல் நேரிடும்போது உருக்கமாக தாங்கமுடியாமல் அழுவார்கள். மனிதர்களே இப்படியிருக்கும்போது உன்னை சிருஷ்டித்த ஆண்டவர் கண்ணீர் விடாமலிருப்பாரா? அன்று உனக்காகக் கண்ணீர் விட்டார். நாம் மனந்திரும்பி சமாதானத்தைப் பற்றிக் கொண்டு தன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார். உலகத்தையும் அதன் மேன்மையையும் உதறித்தள்ளி அழியாத, வாடாத, மாசற்ற ஜீவகிரீடத்தைப் பெற அனுதினமும் ஆவிக்குரிய வளர்ச்சியடைவோம். நாமும் அனுதினமும் கண்ணீரோடு ஜெபிப்போம். "இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்" (லூக்கா 6:21). நிச்சயமாக உங்கள் கண்ணீர் வீண்போகாது. ஆண்டவருடைய கண்ணீர் இன்று நம்மை குணமாக்கியது. அதுபோல் உங்கள் கண்ணீர் மற்றவர்களை குணமாக்கும்.

"என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?" சங்கீதம் 56:8ன்படி உன் குடும்பத்திற்காக, சபைக்காக, உலக சமாதானத்திற்காக, உன் சாட்சியுள்ள ஜீவியத்திற்காக கண்ணீரோடு ஜெபி. ஆண்டவர் தம் கணக்கில் வைத்துக்கொள்வார்.

# The Unknown Tongue
# அந்நிய மொழி

நம்மிடையே உள்ள மதவாதிகள் அந்நிய மொழியில் தாங்கள் பேசுவதாக உரிமை கொண்டாடுகின்றனர். தேவனுடைய ஆவியானவர் தங்கள் வழியாகப் பேசுவதாக அவர்கள் இதற்குச் சொந்த விளக்கம் அளிக்கின்றனர். மேலும், தாங்கள் பேசுவது என்ன என்று அவர்களுக்கே தெரியாது என்றும், அவர்கள் பேசுவதைக் கேட்பவர்களுக்கும் அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் எனப்புரியாது என்றும், ஆனால் தேவனுக்கு மட்டுமே தெரியும் என்றும் விளக்கம் அளிக்கின்றனர். வேதாகமம் இப்படியான ஒரு காரியத்தை எங்கும் கற்றுக்கொடுக்கவில்லை. இம்மக்கள் எளிதில் ஏமாற்றப்பட்டிருக் கின்றனர். அந்நிய மொழியில் அல்ல, வேறு எந்த மொழியிலுமே அவர்கள் பேசிக் கொண்டிருக்கவில்லை. அர்த்தமற்ற சத்தங்களை மட்டுமே அவர்கள் வாயால் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு அந்நிய மொழியைப் பற்றி வேதாகமம் பேசுவது உண்மையே (1 கொரி. 14:2). என்றாலும் அதைப் பேசும் தனிப்பட்ட மனிதன் பேசுவதை அறியாமல் இருக்கவில்லை. இங்கு, பேசுகிறவருக்கு தான் பேசுவது புரிகிறது; ஆனால் கேட்பவர்களுக்கு அது புரியவில்லை. இப்படியாக, அவருடைய புரிந்துகொள்ளுதல் பயனற்றதாக இருக் கிறது. அதின் விளைவாக, அவர் தேவனிடம் பேசுகிறார், (புரிவதின் மூலாக) அவருக்குப் பக்திவிருத்தி உண்டாகிறது. ஆனால் கேட்கிற வர்களுக்கு அது அர்த்தமற்றதாக இருக்கிறது; ஏனெனில் அவருடைய மொழி அவர்களுக்கு அறியாததாக இருக்கிறது (1 கொரி. 14:4).

“மொழி” என்பதற்கு புரியக்கூடிய வார்த்தைகள் என்று எழுத்தர் குறிப்பிடுகிறார் என்று நாம் அறிவோம். ஏனெனில் பவுல் விளக்குகிறார், “அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியா விட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே” (1 கொரி.14:9). தொடர்ந்து பவுல் கூறுகிறார்: “என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டு வதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (1 கொரி. 14:14,15). இங்கு அந்நிய மொழி என்பது கேட்பவர்களுக்குப் புரியாத மொழியாகும். எனவே, இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பவுல் கூறும்போது, தான் ஜெபம் செய்துகொண்டிருக்கும்போது, அதைக் கேட்பவர்களுக்கு அவருடைய ஜெபம் அர்த்தமற்றதாகத் தோன்றும் என்று சொல்லுகிறார். அவர் பாடுவதைப் பற்றியும் இந்நிலையேதான் உண்மை எனக் கூறுகிறார்.

எனவே அவர் ஆவியோடும், புரிந்து கொள்ளுதலோடும் ஜெபிக்கவும், பாடவும் தீர்மானித்தார்.

அந்நிய மொழியைப் பற்றி பவுல் பேசும்போது, அவர் மொழிகளைப் பற்றித்தான் பேசுகிறார். இப்படியாக அறியாத மொழி பற்றிக் குறிப்பிடும்போதும், தெரியாத ஒரு மொழியைப் பற்றியே பேசுகிறார். தொடர்ந்து அவர் எண்ணத்தை தெரிவிக்கும்போது, "இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்ரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடைய மாட்டானே. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" *(1 கொரி. 14:16-19).*

தொடர்ந்து, அப்போஸ்தலர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார், "மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்; ஆகிலும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே. அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" (1 கொரி. 14:21,22).

மீண்டும் கவனியுங்கள்: "யாராவது அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும். ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் (என்ன பேசுகிறான் என்பதை பேசுகிறவன் அறிந்து எனப் பொருள்) தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்" (1 கொரி. 14:27,28). அந்நிய மொழி என்பது அதைக் கேட்கும் படிப்பறிவில்லாதவர்களுக்குப் புரியாத ஒரு மொழி. எனவே, யாராவது அந்நிய மொழியில் பேசுகிறவர்கள் இருந்தால், அவர்கள் வரிசையாக பேசட்டும். அது மொழியாக்கம் செய்யப்படட்டும். ஆனால் மொழியாக்கம் செய்பவர் இல்லையெனில், பின் அங்கே அமைதியாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத் தானேவும், தேவனோடும் பேசவேண்டும். வேறுவிதமாகக் கூறின், அவர்களுடைய சொந்த தனிச்ஜெபங்களை அவர்கள் செய்ய வேண்டும்.

இப்போது வேறுமொழிகளில் பேசும் வல்லமை யாருக்கு அன்று இருந்தது? அப்போஸ்தலர்களுக்கு இருந்தது. ஏனெனில், கர்த்தர் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அவர்களுக்கு வாக்களித்திருந்தார்.

அதின் விளைவான அடையாளங்களில் ஒன்றுதான், அவர்கள் அந்நிய மொழிகளில் பேசினார்கள் என்ற உண்மையாகும் (அப். 2:6). புறஜாதியாரும்கூட தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர் எனக்காட்ட கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அவர்களும் அந்நிய மொழிகளில் பேசினர் (அப்.10). பின்னர், அப்போஸ்தலர்கள் யார்மேல் கைகளை வைத்தனரோ அவர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அந்நிய மொழிகளில் பேசும் வல்லமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டது (அப். 19:1-7). வேறு யாராவது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றார்களா? யாராவது இருந்தால், வேதாகமம் ஒரு இடத்திலும் அப்படிச் சொல்லவில்லையே! ஆனால் இம்மனிதர்கள் இந்த வல்லமையை ஏன் பெற்றனர்? ஒரு பிராந்திய மொழியைக் கற்றுக்கொள்ளத் தேவையான கால அவகாசத்தை எடுக்காமல் அல்லது ஒரு மொழியாக்கம் செய்பவரை அமர்த்திக் கொள்ளாமல், உலகம் எத்திசையிலும் சென்று நற்செய்தியை பிராந்திய மொழியில் போதிக்கும் ஆற்றலைப் பெற இந்த வல்லமையைப் பெற்றனர். இது எவ்வளவு காலம் நீடிக்கவிருந்தது? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு உலகத்திற்குக் கொடுக்கப்படும் வரை. காலம் வரும், அப்போது அந்நிய மொழி (அற்புதமாகப் பேசப்படுவது) ஒழிந்துபோகும் என பவுல் கூறினார் (1 கொரி. 13:8-10; யாக்கோபு 1:25). எனவே, இன்று அற்புதமாக அந்நிய மொழி பேசப்படுவதில்லை. அதற்கு எவ்விதத் தேவையுமில்லை. வேதாகமம் உலகத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**அந்நிய மொழிகளில் பேசுவதாக உரிமை கோருவோர்கூட பல காரியங்களைக் கவனிக்கத் தவறுகின்றனர் :**

1. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அவர்களுக்கு வாக்களிக்கப் படவில்லை.
2. "கைகளை வைத்துக்கொடுக்கும்" அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பிறரின்மேல் கைகளை வைத்துக் கொடுக்கக்கூடியவர்களாக இருந்ததாலும், அப்போஸ்தலர்கள் அனைவரும் மரித்துபோனதாலும், ஒருவரும் அந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெறமுடியாது.
3. அந்நிய மொழிகளில் பேசுவதென்பது, அறியாத ஒரு வேற்றுமொழியையே குறிப்பதாக இருந்தது.
4. அவிசுவாசிக்கே அந்நிய மொழியில் ஒருவர் பேசுவது தேவைப் பட்டது. (ஆனால் இன்று அவர்களுடைய மதச்சடங்குகளில் அநேகமாக விசுவாசிகளின் மத்தியில் மட்டுமே அது நடக்கிறது).
5. இன்று உரிமைகோருபவர்களுக்கு தாங்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாவிட்டால், மேலும் கேட்பவர்களுக்கும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாவிட்டால், பின்னர் தேவனுக்குத் தெரியும் என்று அவர்கள் எவ்வாறு எதிர்பாாக்கலாம்?

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வழியில் நடக்கவில்லை. எனவே மனிதர்களுக்கு அதே வல்லமை இன்று இல்லை என்பது தெளிவு.

6. இன்று அந்நிய மொழியில் பேசுவதாகக் கூறுவோர், பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பேசியதைப் போன்று வேற்றுமொழிகளில் பேசமுடியாது. இலங்கைக்கு இவர்களுடைய பெரிய போதகர்கள் வரும்போது, "அந்நிய மொழி வரம்" இருப்பதாக உரிமை கோராத நம்மைப்போலவே மொழியாக்கம் செய்கிறவர்களை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, எந்த வழியிலேயும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட அந்நிய மொழியோடு இன்றைய நாளில் உரிமை கொண்டாடும் "அந்நிய மொழி"யை ஒப்பிட இயலாது.

முடிவாக, பல மக்கள் இன்று ஏமாற்றப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவு. இந்தக் காரியத்தில் நீங்கள் உண்மையை அறிந்துகொள்ள உங்கள் வேதாகமத்தைப் படித்து, கற்றுக்கொள்ள உங்களை வேண்டுகிறோம். ஆனால் உங்களிடம் ஏதோ சக்தி உள்ளதென்றோ அல்லது பிறரிடம் அப்படிப்பட்ட சக்தி இருப்பதாகவோ எண்ணி ஏமாந்துபோக வேண்டாம். ஏனெனில், உண்மையில் அப்படிப்பட்ட எந்த வல்லமையும் இன்று மனிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

*J.C. CHOATE*

*தமிழில்: எஸ். எஸ். ராஜன்.*

## சிந்தனைக்கு



### உங்கள் இன்சூரன்ஸ் எங்கே?

☆ பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் (மத்தேயு 6:20).

☆ பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள் (லூக்கா 12:33).

☆ உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன் (பிலிப்பியர் 4:17).

☆ நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு (1 தீமோ. 6:19).


**சென்ற இதழ் Who Am I?ன் விடை :**

**பர்னபா**

அப்போஸ்தலர் 4:36,37; 9:27; 11:19-24; 13:2; 14:11,12; 15:36-41; கொலோசெயர் 4:10.

சிறுவர் பகுதி

# பிலேயாம்



வேதபகுதி : எண்ணாகமம் 22:5–33

மோவாப் தேசத்திலே ஒரு ராஜா இருந்தான். அவன் பேர் பாலாக். அவன் ஒருமுறை பேயோரின் குமாரனாகிய பிலேயாம் என்ற தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலர்களை சபிக்க அழைத்து வரும்படி சில மூப்பர்களை அனுப்பினான். அவர்கள் குறிசொல்லுதற்குரிய கூலியை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு பிலேயாமை சந்தித்தார்கள். பிலேயாமோ, இராத்திரிக்கு இங்கே தங்கியிருங்கள். கர்த்தர் உத்தரவு கொடுப்பதை சொல்வேன் என்றார். கர்த்தர் நீ அவர்களோடே போகவும் வேண்டாம், அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார். பிலேயாமோ அப்படியே வரமாட்டேன் என்றான். இதை அறிந்த பாலாக் மீண்டும் பிரபுக்களை அனுப்பினான். அதுமட்டுமா, உம்மை மிகவும் கனம் பண்ணுவேன், நீர் சொல்வதையெல்லாம் செய்வேனு சொல்லச் சொன்னான். அதுக்கு பிலேயாம் எனக்கு தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாதுன்னு சொல்லி அவுங்கள இந்த இராத்திரிக்குத் தங்கியிருங்க், தேவன் சொல்வதை சொல்றேன் என்றான். அன்று தேவன் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்று சொன்னாரு.

தேவன் ஒருவிசை சொல்லிய காரியத்தை மாற்றுவாரா? மாற்ற மாட்டாருல. ஆனா, இவனுக்கு அவுங்க சொன்ன கூலி மேலே ரொம்ப ஆசை. 'ஆசை யாரை விட்டுச்சு' இல்லையா? காலமே எழுந்து கழுதையின் மேல் சேணங்கட்டி போனான். பாருங்க, தேவனுக்கு வந்ததே கோபம்! ஒரு பட்டயத்தைப் பிடிச்சுக்கிட்டு கர்த்தருடைய தூதன் வழியிலே நின்னாரு. கழுதை இரண்டுமுறை விலகி, விலகி போச்சு. மூன்றாவது முறை நேருக்கு நேராய் நின்னாரு. போக வழியில்லாமல் கழுதை டபக்னு படுத்துகிருச்சு. பிலேயாம் அடி, அடினு அடித்தான். உடனே கழுதை பேசுச்சு. என்னானு தெரியுமா? நீர் என்னை இப்பொழுது மூன்றுதரம் அடிக்கும்படி நான் உனக்கு என்ன செய்தேன்? என்று கேட்டது. அதற்குப் பிலேயாம் நீ என்னைப் பரியாசம் பண்ணிக்கொண்டு வருகிறாய். கையில் ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால் இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். அதற்குக் கழுதை நீ என்னைக் கைகொண்ட காலம் முதல் இந்நாள் வரைக்கும் நீர் ஏறின கழுதை நானல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் உனக்குச் செய்ததுண்டா என்றது. அதற்கு அவன் இல்லை என்றான். அப்பொழுதுதான் பிலேயாமின் கண்ணுக்குத் தெரிந்தது ஒரு பட்டயத்தோடு எதிர்நிற்கிற தூதன். கழுதை மட்டும்

விலகவில்லையென்றால் உன்னை வெட்டிப் போட்டிருப்பேன் என்று தேவதூதன் சொன்னாரு ஏன் அப்படிச் சொன்னாரு? தேவன் சபிக்காத மக்களை இவன் சபிக்க கூலி வாங்கிக்கொண்டு போனான். நாம அப்படிச் செய்யலாமா? ஒருநாளும் அப்படிச் செய்யக்கூடாது. ஆசீர்வதிக்கிறதே ஒழிய ஒருவரையும் சபிக்கக்கூடாது சரி தம்பி, தங்கைகளே, மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

## செப்டம்பர் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | R. ஜெபர்சன் ஜேக்கப் | = | ஐரேனிபுரம் |
| 2. | N. டேனியேல் தமிழ்வாணன் | = | மேல்விசாரம் |
| 3. | I. ரேய்ச்சல் அமுதமணி | = | மேல்விசாரம் |
| 4. | A. ஆரோக்கியதாஸ் | = | அன்னவாசல் |
| 5. | A. மைக்கேல் ராஜ்குமார் | = | திண்டுக்கல் |
| 6. | N. நகோமி ஜாய் | = | குன்னூர் |
| 7. | R. பெரியசாமி | = | மங்களப்பட்டி |
| 8. | S. சகாயசெல்வ கிஷோர் | = | கன்னியாகுமரி |
| 9. | G. அன்னலெட்சுமி | = | கன்னியாகுமரி |
| 10. | V. ஜான்பால் | = | கோவில்பட்டி |
| 11. | A. கந்தசாமி | = | தெக்கலூர் |
| 12. | R. நோபில் | = | ஐரேனிபுரம் |
| 13. | J. மேரி எலிசபெத் கலைவாணி | = | வதிலை |
| 14. | மேரியம்மாள் | = | வதிலை |
| 15. | A. ராஜ்குமார் | = | வண்டிப்பெரியார் |
| 16. | M.சேகர் | = | மோதுப்பட்டி |

## முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் ஊழியம்

- தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள் (லூக்கா 8:3).
- காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் (அப்போஸ்தலர் 2:45).
- இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம் (1 தெச. 2:9).
- மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம் செய்யுங்கள் (எபேசியர் 6:8).
- மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள் (1 தீமோ. 5:22).
- தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங் களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு (1 தீமோ. 6:5).

பெண்கள் பகுதி

# படைப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும்
# The Order of Creation and the Fall



சென்ற இதழின் தொடர்ச்சி . . .

ஒரு ஸ்திரீயானவள் குறிப்பாக தேவன் அவளுக்கென்று திட்டமிட்டிருந்த ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும்படியே தேவனால் உருவாக்கப்பட்டாள். அதாவது குடும்பத்தில் தன் புருஷனுக்கு ஏற்ற துணையாகவும், வீட்டை நடத்தவும் பிள்ளைகளை வளர்க்கவும் உருவாக்கப்பட்டாள் (1 தீமோ. 5:14, தீத்து 2:4-5). இந்த வேலையானது, அவள் தனது குடும்ப நலனைப் பற்றிய பொறுப்புடனும், அன்புடனும், கரிசனையுடனும் இருப்பதே ஆகும். ஒருவேளை ஏவாளின் இப்படிப்பட்டதான இயற்கையான குணாதிசயங்கள் அவளை சாத்தானுக்குச் செவிகொடுக்கும்படி வழிநடத்தி தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படியும் அவசியத்தைக் காட்டிலும் தன் குடும்பத்திற்காகத் தன் பார்வைக்கு நலமானதை தெரிந்துகொள்ளச் செய்திருக்கலாம். அவளது இந்த தெரிந்து கொள்ளுதல் தவறானதும், அவளது கீழ்படியாமை மனிதகுலம் முழுமைக்கும் அழிவையும் கொண்டுவந்தது.

இந்த சோக சம்பவத்தில் நாம் பார்ப்பது, புருஷனுக்குரிய தலைமைப் பொறுப்பை முதல்முதலாக ஸ்திரீயானவள் எடுத்துக்கொண்டதும், அவளது புருஷன் அவள் அதிகாரம் செலுத்தும்படியாக விட்டுவிட்டதுமாகும். அந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பது குறித்து ஏவாள் தன் புருஷனிடம் சென்று அவனுடைய விருப்பத்தையும், ஆலோசனையையும் கேட்டதாக எந்த ஆதாரமும் வேதத்தில் காணப்படவில்லை. அதேசமயம் தேவன் என்ன கூறியிருந்தார் என்பது பற்றி நன்கு அறிந்திருந்த ஆதாமும் ஏவாளை தடுத்து நிறுத்த முயற்சித்ததாக வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை. இருந்தபோதிலும் வேதம் கூறுகிறது, அவன் ஏவாளுடன் இருந்தான் என்று. தேவன் குடும்பத்திற்கென்று திட்டம் பண்ணின தலைமைத்துவம் மாற்றப்பட்டு அதன் விளைவாக மனுக்குலத்திற்குப் பெரிய சாபமும், வீழ்ச்சியும் ஏற்படுத்துதிவிட்டது எவ்வளவு துக்கமான ஒன்றாகும்.

*Betty Burton Choate* — தமிழில்: குளோரி அர்ஜுனன்

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருப்பது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் (எபேசியர் 5:23).

# இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் இம்மாதம் இறுதிக்குள் அனுப்பிவைக்கவும்.

1. என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது என்ற தாசன் யார்?
2. எவர்களிடத்தில் ஞானம் உண்டு?
3. இந்த மனுஷன் கொள்ளை நோயாகவும் . . . இருக்கிறானென்று யார் யாரைக் குறித்துச் சொல்லுகிறான்?
4. எப்படிப்பட்ட புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்?
5. வேலையாள் எதற்குப் பாத்திரனாயிருக்கிறான்?
6. உன் ஆதி தகப்பன் என்ன செய்தான்?
7. சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து எப்படிப்பட்ட வேதனைப்படுகிறது?
8. சத்தியத்தை விட்டு விலகி . . . சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போட்டவர்கள் யார்?
9. உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் யாருக்குப் பகைஞனாயிருக்கிறான்?
10. அநீதத்தின் கூலியை விரும்பி இஸ்ரவேலரைச் சபிக்கச் சென்ற தீர்க்கதரிசி யார்?

குறிப்பு : வேதஅறிவுப்போட்டி வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளவே. இதில் கலந்துகொள்ளும் சகோதர, சகோதரிகள் மற்றும் மாணவ, மாணவிகள் உங்கள் சுயமுயற்சியில் விடைகளை வேதாகமத்தை வைத்துக் கண்டுபிடியுங்கள். தயவுசெய்து மற்றவர்களைப் பார்த்து எழுதாதீர்கள். இவ்விதழில் பெயர் இடம்பெற்றால் போதுமா ? ஜீவபுஸ்தகத்தில் உங்கள் பெயர் இடம்பெற வேண்டாமா ? கீழ்க்காணும் வசனங்களை படித்து முடிவுசெய்க.

பிரசங்கி 12:14; மத்தேயு 5:37; எபேசியர் 4:25; 1 பேதுரு 4:5; மத்தேயு 12:36

- ஆசிரியர்

## ஆகஸ்டு மாத இதழின் விடைகள்

1. தயை - யோபு 6:14
2. ஏலி - 1 சாமு. 2:12
3. என் பிதாவையும் - யோவான் 15:23
4. அலங்கரிப்பு - 1 கொரி. 12:24
5. பிரமாணத்தை - கலாத்தியர் 2:18
6. மனுஷன்
7. பண்டிகை
8. தேவபக்தி
9. ராகாப்
10. அத்தாட்சியாயிருக்கிறது.

## ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் தேவையில்லை

தேவனுடைய இராஜ்யத்தின் பொருட்டு
விருத்தசேதனமுள்ளவர்களில் பவுலுக்கு ஆறுதல்
செய்துவந்தவர்கள் ஐந்துபேர்.

1. தீகிக்கு
2. ஒநேசிமு
3. அரிஸ்தர்க்கு
4. மாற்கு
5. யுஸ்து

— கொலோசெயர் 4:7-11

இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கின்றேன் (1 யோவான் 5:1).

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என நம்புகிறேன் (ரோமர் 10:4).

இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கின்றேன் என்று சொல்லி ஞானஸ்நானம் பெற்றேன் (அப். 8:37).

கிறிஸ்தவன் (அப். 11:26).

கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டவன் (எபேசி. 2:5).

கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறேன் (கலாத் 4:7).

கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடுகிறேன் (பிலி. 2:21).

இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருவேன் (யூதா 17).

கிறிஸ்துவின் அவயவம் (1 கொரி. 6:15).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன் (ரோமர் 1:16).

கிறிஸ்துவின் ஊழியக்காரன் (கொலோ. 4:12).

கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பேன் (2 யோவான் 9).

இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய் தீங்கு அநுபவிப்பேன் (2 தீமோ. 2:3).

கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன் (கொலோ. 1:24).

கிறிஸ்துவின் சபைக்குச் செல்கிறேன் (ரோமர் 16:16).

இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறேன் (2 தெச. 2:1).

கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவேன் (கொலோ. 3:23).

கிறிஸ்து இயேசுவினால் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன் (பிலிப்பியர் 3:12).


கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் (ரோமர் 9:2).

எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன் (1 கொரி. 7:7).

## ஓர் நற்செய்தி

பார்வையற்றோர்க்கான பிரெய்ல் முறையில் தபால்வழி வேதபாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பயில இன்றே எழுதவும்.

வாசகர்களே, பார்வையற்ற உங்களது நண்பர்களுக்கு இப்பாடங்களை அறிமுகம் செய்யுங்கள்.



மேலும் 15 பாடங்கள் கொண்ட இலவச தபால்வழி திருமறைப் பாடங்கள் முடிவில் நற்சான்றிதலும் சிறிய பரிசும் உண்டு. இன்றே 1 ரூபாய் ஸ்டாம் உடன் எழுதவும்

இயக்குநர்

**பிரெய்ல் தபால் பாடங்கள்**
தபால் பெட்டி எண் – 2
எல்லீஸ்நகர், மதுரை – 625 010.



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday, Thursday | 8.45P.m 9.00P.m<br>9.00P.m 9.15P.m | Box.3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45P.m 8.00P.m | Box 3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sunday, Tuesday, Thursday | 2.00P.m 2.15P.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday, Tuesday, Thursday | 6.45P.m 7.00P.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45P.m 4.00P.m | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| KANNADA | Sunday | 1.45P.m 2.00P.m | Box. 448<br>Bangalore - 560 004 | ROBERT RATHNAKAR |

Please write to these Addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

**WORD OF CHRIST**
**MONTHLY MAGAZINE**
Regd. No. 84661 - 92
Postal Regn.No.TN/DDL/19

Edited by B.Arjunan on behalf of Church of Christ
2.2.102-D/5 Rajan Nagar
*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*
**BATLAGUNDU - 624 202.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 8.00 | மணி |
| வியாழன் | மாலை | 6.45 | மணி |



கிறிஸ்துவின் சபை
*2.2.102-D/5 ராஜன்நகர்*
வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்
Phone: (04543) 23278

From
WORD OF CHRIST
*POST BOX NO.5*
BATLAGUNDU - 624 202
S.INDIA.

To